DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :84/2024**

**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -8 (LW -10)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திரு.கிருஷ்ணன்** | Caste | : | |
| Father Name | : | **திரு.கேசவன்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **17.08.2026.**

**PW -8 (LW -10)**

**(2, 3, 5, 7** எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு **355** பிஎன்எஸ்எஸ் மனு அனுமதி. வழக்கறிஞர் மூலம் ஆஜரானார்.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை இல்லை, சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் திருச்சி பாலக்கரை கீழபடையாட்சி தெருவில் குடியிருந்து வருகிறேன். இறந்து போன வக்கீல் கோபி கண்ணன் எங்கள் பகுதியை சேர்ந்த பக்கத்து ஏரியாவை சேர்ந்தவர். அ.சா.1 சந்திரசேகர் என்பவர் கோபி கண்ணனின் அண்ணன். கடந்த 09.05.2021–ம் ஆண்டு சுமார் இரவு 07.20 மணியளவில் கோபி கண்ணனை பீம நகரில் வைத்து வெட்டி கொன்று விட்டதை கேள்விபட்டேன். எங்க ஏரியாவில் பால விநாயகர் கோவில் விழா சம்பந்தமாக ஹேமந்த்துக்கும், கோபி கண்ணனுக்கும் பிரச்சனை இருந்தது.

ஹேமந்த் சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு அவரை கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக கேள்விபட்டேன். ஹேமந்த் குமாரும் எங்கள் பகுதியை சேர்ந்தவர் தான். அதில் கோபி கண்ணன் மீதும் குற்றவாளியாக வழக்கு

தொடுத்திருந்தார்கள். நான் சங்கதியை கேள்வி பட்ட பிறகு இரவு 08.30 மணியளவில் ஏகேபி கம்பெனிக்கு முன்பு வந்து பார்த்தேன். ரத்த வெள்ளத்தில் கோபி கண்ணன் படுத்து கிடந்தார். கோபி கண்ணனை எனக்கு தெரியும்.

அவர் அந்த சமயத்தில் மஞ்சள் புளு கலந்த டி–சர்ட்டும், கருப்பு கலர் லோயரும் அணிந்திருந்தார். போலீசார் அங்கு வந்தார்கள். அந்த இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். அதை நான் பார்த்ததால் என்னை சாட்சியாக இருக்க சொன்னார்கள். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.2** ஆகும்.

கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.3** ஆகும். அந்த கையெழுத்து சம்பவ இடத்தில் தார் ரோடு, மற்றும் ரத்தத்தோடு இருந்த தார் ரோடு எடுத்ததற்காக சாட்சி கையொப்பம் செய்தார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எ.த.கு.வி</u> :**

| | |
|---|---|
| **கேள்வி** | கோபி கண்ணன் என்பவர் ஹேமந்த்குமார் கொலை வழக்கு சம்பந்தமாக உள்ள வழக்கில் அவர் குற்றம் சுமத்தப்பட்டவர் என்பது பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியுமா? |
| **பதில்** | நேரடியாக தெரியாது. |
| **கேள்வி** | நீங்கள் அந்த இடம் சென்று பார்த்த பொழுது போலீசார்கள், மோப்ப நாய் பிரிவு, கைரேகை விரல் நிபுணர்கள், வீடியோ மற்றும் ஆடியோ பிரிவினர் ஆகியோர் விசாரித்து கொண்டிருந்தனர் என்றால்? |
| **பதில்** | போலீசார் இருந்தார்கள். மற்றவர்கள் பற்றி ஞாபகம் இல்லை. |
| **கேள்வி** | உங்களுக்கு போட்டோ மற்றும் வீடியோ எடுத்தது தெரியுமா? |
| **பதில்** | எனக்கு தெரியும். |
| **கேள்வி** | 08.30 க்கு சென்ற நீங்கள் எவ்வளவு நேரம் அங்கு இருந்தீர்கள்? |
| **பதில்** | சுமார் 60 நிமிடங்கள். |
| **கேள்வி** | அந்த 60 நிமிடங்களில் கோபி கண்ணனின் உடலை போலீசார் வீடியோ மற்றும் போட்டோ எடுத்தார்களா? |

IHADCOURTORDERCOPY

| | |
|---|---|
| **பதில்** | எடுக்கவில்லை. |
| **கேள்வி** | மோப்ப நாயை வைத்து ரத்தம் சிந்தி கிடந்ததை வைத்து அந்த இடத்தை சுற்றி கொண்டு போய் பார்த்தார்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | வரைபடத்தில் மற்றும் பார்வை மகஜரில் உங்களை மற்றும் யார் யாரை விசாரித்தார்கள் என்று குறிப்பிட்டிருந்தார்களா? |
| **பதில்** | நானும் எனது நண்பர் ஜோசப் ஆகியோர் மட்டும் இருந்தோம். |
| **கேள்வி** | பார்வை மகஜரில் உங்களை விசாரித்தது சம்பந்தமாக எழுதி இருந்தார்களா? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | அந்த பகுதியில் அந்த நேரத்தில் தெருவின் இரு புறமும் உள்ள கடைகள் மற்றும் வீடுகளில் சிசிடிவி பதிவுகள் பொருத்தப்பட்டிருந்தது என்றால்? |
| **பதில்** | இருந்தது. |
| **கேள்வி** | சிசிடிவி பதிவுகள் பற்றி பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் குறித்தார்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | பார்வை மகஜரையும் வரைபடத்தையும் கைப்பட ஆய்வாளர் தயாரித்ததை நீங்கள் பார்த்தீர்களா? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | அந்த இடத்தில் கோபி கண்ணனின் செல்போன், பணம் இருந்ததை போலீசார் கைப்பற்றினார்களா? |
| **பதில்** | அதெல்லாம் எனக்கு தெரியாது. |
| **கேள்வி** | கைப்பற்றியதாக சொல்லப்படும் பொருட்களை அந்த இடத்தில் வைத்து போலீசார் பேக்கிங் செய்து சீல் வைத்து எடுத்து கொண்டார்களா? |
| **பதில்** | அதையெல்லாம் நான் பார்க்கவில்லை. |
| **கேள்வி** | உங்களை போலீசார் விசாரித்த பொழுது ஹேமந்த்குமார் கொலை வழக்கில் கோபி கண்ணன் குற்றவாளி என்று சொல்லவில்லை என்றால்? |
| **பதில்** | நான் சொல்லவில்லை. |
| **கேள்வி** | நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன விதத்தில் நீங்கள் அந்த இடத்திற்கு 08.30 மணிக்கு வந்ததாக சொல்வது பொய் என்றாலும், நீங்கள் காவல் நிலையத்தில் வைத்து அங்கு தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையெழுத்து செய்துள்ளீர்கள் என்றாலும், நீங்கள் கோபி கண்ணனின் குடும்பத்திற்கு வேண்டப்பட்டவர் என்பதால் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்? |

II ADJ COURT, TRICHY



| | |
|---|---|
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | அன்று இரவு மாவட்ட அமர்வு நீதிமன்ற காவல் நிலையத்திற்கு சென்றீர்களா? |
| **பதில்** | செல்லவில்லை. |
| **கேள்வி** | அந்த இடத்திற்கு அருகில் இருந்த கடைக்காரர்கள், குடியிருப்பவர்கள் ஆகியோர்களை சாட்சியாக அழைத்தார்களா? |
| **பதில்** | தெரியாது. |
| **கேள்வி** | நீங்களும், இறந்து போன சாட்சி ஜோசப் என்பவரும் ஒரே பட்டறையில் வேலை செய்யும் நபர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் கையெழுத்து போட்டதாக சொன்ன இடத்தில் உங்கள் தொழில் சம்பந்தமாக மற்றும் நீங்கள் குடியிருப்பு சம்பந்தமாக எந்த வேலையும் இல்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்களும் சாட்சி சத்திய பிரகாஷ்–ம் ஒன்றாகத்தான் வேலை பார்க்கிறீர்களா? |
| **பதில்** | இல்லை. |

**மேற்படி குறுக்கு விசாரணையை மற்ற எதிரிகள் தரப்பில் ஏற்று கொள்ளப்பட்டது.**

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 17.08.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 17.08.2026